அசல்

24.5.42. நகரத்தார்
சொக்கலிங்கம் புதூர்.

அசல்-1

116.

2. சொக்கலிங்கம்புதூர்
24.5.42

அன்புமிக்க ஐயா!

தமிழுக்கென்றே பிறந்து தமிழுக்கென்றே வாழ்ந்து தமிழ்த்தொண்டே புரிந்துவந்த தங்கள் அருமைத்தந்தையாரின் பிரிவைப் பத்திரிகைகளிற் காண நேர்ந்ததும் நாங்கள் ஆறாத துன்பக்கடலுள் ஆழ்ந்தோம். எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாருடைய ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கக் கூடிய கூட்டத்தில் பாஸப்பெற்ற சரமகவிகளையும் அனுப்பியிருக்கின்றோம்.

இங்ஙனம்
நகரத்தார்
சொக்கலிங்கம்புதூர்
இராமநாதபுரம் ஜில்லா.

3106

அசல்

24.5.42. நகரத்தார்
சொக்கலிங்கம் புதூர்.

அசல்-1

2.

உத்தமதானபுரம் மஹாமஹோபாத்தியாய
தாக்ஷிணாத்யகலாநிதி, டாக்டர், உ. வே.
சாமிநாதையரவர்கள்
பரமபதமடைந்த போது கூறியன.

I உத்தமனே உனைப்பயந்த காரணத்தால்
உவப்புடனே உலகிலுள்ளோர்
உத்தமதானபுரமென் றுன்னூரைச்
சிறப்பித்தார் உண்மையாக
எத்திசையும் புகழ்பரவு சாமிநாதப்பெரியோய்
நின் இணைத் தோய்
இத்தரையில் புகழ்பரக்கக் கிடமிலதென்
றும்பருல கெய்திட்டாய்.

II பூவுலகில் புகழ்பரவத் தமிழ்பரப்பும்
புண்ணியனாம் சாமிநாத
தேவபாஷையிலுள்ள தெள்ளியநூலனைத்
தையுமே தேர்ந்துகொண்டு
மேவருமச் சியற்றவை மேகவாகனனுள்ளம்
விரும்பச் சென்று
யாவருங் கொண்டாடவங்கே ஆராய்ச்சி
தொடங்கினையோ அன்புமிக்கோய்.

ஆசிரியர்க் கிரிய இணைமத் தனையும் அமைவுற்றும்
அருமையாக
III மாசகலமாணவர் தம் மதிக்குமதி யீந்திட்டாய்
மன்னர் போற்றிப்
பேசரிய பட்டங்கள் பலதந்து சிறப்பித்தும்
பேணினால்
ஏசனிடத் தன் பொருக்கு சாமிநாதப்பெரியோய்
எங்கிற்றாய் நீ.

அசல்

24.5.42. நகரத்தார்
சொக்கலிங்கம் புதூர்.

அசல் –1



பெற்றோர்கள் மனமுவக்கச் செய்வதுவே
சிறந்தகடனென்று தேறிக்

III கற்றோர்கள் கொண்டாடக் கடமையினைக்
கருத்துடனே கண்டாய் நீயே
மற்றோருன் வழிகண்டு மகிதலத்து
மாண்புறவே மகிழ்வுற்றாய் நீ
உற்றோனே சாமிநாதப் பெரியோய்
உம்பருலகுற்றாய் கொல்லோ.

V பலமொழிகள் பாரிடையே பரவியுள தென்றாலும்
பண்புவாய்ந்த
நலமொழிநம் தமிழ்மொழியே நாதனருள்
மொழியென்று நன்கு தேர்ந்து
நிலமிசையம் மொழிபரப்பி நீள்புகழை
யுற்றனையால் நினைப்போலக்
இலகுபுகழினிப்பரப்ப யாருளரோ
இயம்புவாய் சாமிநாத!

—